மீன் உறைய வைக்கும் இத் தொழிற்சாலையில் இந்த நிறுவனம் ஒப்படைக்கப்படும் என்று குத்தகை நிறுவனம் தற்போது மீனளத் இத் தொழிற்சாலை 31—7—1971 அன்று மீனளத்துறையிடம் துறை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளது.

மீன் உறைய வைக்கும் இத்தொழிற்சாலையில் இந்த நிறுவனம் சுமார் 100 தொழிலாளர்களைத் தற்போது வேலைக்கு அமர்த்தியுள்ளதாக மீனளத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். இத் தொழிற்சாலையை மேற்கொண்ட பின்னர், ஒப்பந்தப் புள்ளிகளை வரவழைத்து மீண்டும் புதிதாகக் குத்தகைக்கு விட அரசு கருதியுள்ளது. புதிய நிர்வாகம் செயல்படத் தொடங்குகையில் அதிக அளவில் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்பைப் பொறுத்த வரையில், சென்னை மாநகரிலும் அதைச் சுற்றிலும் மீன் உறைய வைக்கும், பதப்படுத்தும் ஏனைய ஐந்து தொழிற்சாலைகள் இருக்கின்றன. மூலப்பொருள்கள் தற்போது கிடைக்காமையாலும் உறைய வைக்கும் திறன் அதிக அளவில் இருப்பதினாலும், கிடைக்கும் மூலப்பொருள்கள் அனைத்தும் பயன்படுத்தப்படும். எனவே, அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் குறைவு ஏதும் இருக்காது. இவ்விளக்கத்தின் காரணமாக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இத் தீர்மானத்திற்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐ தளர்க்கல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

"சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றுவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்பதைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு.

(அ) குன்னூரில் குடிநீர் கிடைக்காமையும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும்.

திரு. சோ. கருணைநாதன்: பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் ";நீலகிரி மாவட்டம் குன்னூர் நகரத்தில் தற்போது குடிநீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதுபற்றியும், இது குறித்து அரசு எடுக்க வேண்டிய நட